வணிக வழக்குகள் நீதிமன்றம் (சார்பு நிலை)
செங்கல்பட்டு

முன்னிலை : திரு.K.R.கண்ணன்,பி.ஏ.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
செங்கல்பட்டு

2026–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், ஆடி திங்கள் 28 ம் நாள்

வணிக அசல் வழக்கு எண். 73/2026

(மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

அசல் வழக்கு எண்.185/2020)

C.N.R.No.TNCG1B-000077-2026

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
அதன் முதன்மை மேலாளர்
வண்டலூர் கிளை
சென்னை – 48. .... வாதி

// எதிர் //

1. M/s S.V.J.P இன்ஜீனியரிங்

அதன் உரிமையாளர்

2. கே.விஜய குமார்

த.பெ. ஆர். கல்யாண சுந்தரம்,

எண்.2/317, வசந்தா அவிண்யூ,

திருவெங்கடபுரம், வெங்கம்பாக்கம்,

மேலக்கோட்டையூர் அஞ்சல், சென்னை – 127.

..........பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 05.08.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி வங்கி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.என்.கருணாநிதி, திருமதி.எஸ்.அல்லி, திரு.எஸ்.சுப்பிரமணியம், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.எஸ்.பழனி, திரு.எஸ்.டில்லிராஜ் அவர்கள் ஆஜராகியும், வாதி, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டும், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதுரை, வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள், முன்தீர்ப்புகள் ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று நீதிமன்றம் வழங்கும்.

// தீர்ப்புரை //

வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் தாவா கடன் நிலுவைத் தொகையான ரூ.16,70,268/– தாவா தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 11.7 சதவீத வட்டியினை சேர்த்து செலுத்த உத்தரவிடக்கோரியும் மற்றும் செலவுத் தொகை, இதர பரிகாரங்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி வங்கி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :–

2.1) வாதி வங்கியில் 2ம் பிரதிவாதியான, முதல் பிரதிவாதி நிறுவனத்தின் உரிமையாளர் CNC Machine & Stabilizers புதிதாக வாங்குவதற்காக 07.09.2016 ம் தேதி ரூ.20 லட்சம் கடன் பெற்றுள்ளார். மேலும் முதல் பிரதிவாதி நிறுவனத்தின் பணி மூலதன தேவைகளுக்காக செயல்பாட்டுக் கடனாக 28.10.2016 ம் தேதி ரூ.2 லட்சம் கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக வாதி வங்கி கேட்கும் போது தொகையை திருப்பி செலுத்துவதாக உறுதி அளித்து கடன் உறுதிச் சீட்டுகள், அசையும் சொத்தின் அடமான பத்திரம், பிணைக்கடிதம், கடனுக்கான பிணை ஆவணம் ஆகியவை ஏற்படுத்தி கடன் தொகைக்கு 9.7 சதவீதத்திலிருந்து 11.7 சதவீதம் வரை

வருடத்திற்கு வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு ஆவணங்களை ஏற்படுத்தி கடன் பெற்றுள்ளனர்.

2.2) அதன் பிறகு கடன் நிலுவைத் தொகையை பிரதிவாதிகள் வியாபாரமில்லாத காரணத்தால் செலுத்த தவறியுள்ளானர். வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில், கடன் நிலுவைத் தெகையை செலுத்தவில்லை. வாதி வங்கி அதிகாரிகன் பல முறை நேரிலும், கடிதம் மூலமாகவும் வட்டியுடன் கடன் நிலுவைத் தொகையை கேட்டும், பிரதிவாதிகள் திருப்பி செலுத்த தவறியதால் 13.12.2019 தேதியில் வாதி வங்கி அனுப்பிய அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு சார்வு ஆகாமல் திரும்பி வந்துள்ளது.

2.3) பிரதிவாதிகள் கடன் நிலுவைத் தொகை ஒப்புக்கொண்டு 19.09.2019 மற்றும் 30.12.2019 தேதிகளில் கடிதம் வாதி வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ளதால் தாவா காலவரச் சட்டத்தினால் பாதிப்படையவில்லை. ஆகையால் வாதி வங்கி தாவாவில் கோரியுள்ளபடி பிரதிவாதிகள் தாவா கடன் நிலுவைத் தொகையான ரூ.16,70,268/– 11.7% வருடாந்திர வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் திருப்பி செலுத்திட உத்தரவிட வேண்டி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் : –</u>

3.1) வாதியின் தாவா சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல.

3.2) தாவாவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது. இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளும் ஒரு சில சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகளை வாதி வங்கி நிரூபணம் செய்ய வேண்டும்.

3.3) தாவாவை வாதி வங்கி மோசடியான ஆவணங்களை கொண்டு பிரதிவாதியை அலக்கழிக்க வேண்டி பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யத்தக்கது.

3.4) தாவா வழக்குறை பத்தி 3ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பகுதியானவை சரி. 2ம் பிரதிவாதி M/s.S.V.J.P. Engineering என்ற நிறுவனத்தின் உரிமையாளராகயிருந்து வியாபாரம் செய்து வந்தது உண்மை. வாதி வங்கியில் CNC Machine & Stablizers புதியதாக வாங்குவதற்கு ரூ.20 லட்சம் வரை வாதி வங்கியில் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தவணைக் கடனை 2ம் பிரதிவாதி பெற்றார். ஆனால் 2ம் பிரதிவாதி வாதி வங்கியில் செயல் மூலதனக் கடன் ரூ.2 லட்சம் பெற்றார் என்பது மறுக்கப்படுகிறது.

3.5) பிரதிவாதிகள் தாவா வழக்குறை பத்தி 3ல் குறிப்பிட்டவாறு 28.10.2016 ம் கடனுக்கான ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை, செயல் மூலதனக் கடனுக்காக 2ம் பிரதிவாதி கையொப்பம் செய்து ஆவணங்கள் ஏற்படுத்தியதாக வாதி வங்கி தாவாவில் ஆவணங்களை மோசடியாக ஏற்படுத்தியுள்ளது. தாவா கடனைப் பற்றி பிரதிவாதிகளுக்கு ஏதுவும் தெரியாது. தாவா வழக்குறையில் கடனுக்காக பிரதிவாதிகள் 11.7% வட்டி செலுத்தவேண்டும் என்பதை பிரதிவாதிகளிடம் வாதி வங்கி தெரிவிக்கவில்லை.

3.6) தாவா வழக்குறை பத்தி 4 மற்றும் 5ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்ப்டுகிறது. பிரதிவாதிகள் ஏற்கனவே ரூ.12 லட்சம் வரை தாவா கடன் அசல் மற்றும் வட்டிக்காக தவணையாக செலுத்தியுள்ளார்கள். ஆனால் வாதி வங்கி அதிகாரிகள் அவ்வாறு செலுத்திய தொகையை கடன் கணக்கில் வரவு வைக்காமல் மோசடியாக தவறான கணக்குகளை தாக்கல் செய்துள்ளார்கள். தாவாவில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த ஒரு ஆவணங்களும் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு ஏற்படுத்தி கொடுக்கவில்லை, பிரதிவாதிகள், 28.10.2016 ம் தேதி கடன் ஒப்பந்தம் ஏதுவும் வாதி வங்கிக்கு ஏற்படுத்தவில்லை மற்றும் 19.09.2019 ம் தேதி எந்த ஒரு கடிதமும் ஏற்படுத்தவில்லை. ஆகையால், பிரதிவாதிகளுக்கு எதிராக மோசடியாக

தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

3.7) வாதி தாக்கல் செய்துள்ள தாவா, வழக்குரை, ஆவணங்கள், பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை, ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

4. எழுவினாக்கள் :–

1. வாதி தாவாவில் கோரியுள்ளவாறு ரூ.16,70,268/– திருப்பி பெற அருகதை உடையவரா ?
2. வாதி தாவாவில் கோரியுள்ளவாறு 11.7% வட்டி பெற அருகதை உடையவரா?
3. வேறு என்ன பரிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்?

5.1) வாதி தரப்பில் வாதி வங்கியின் முதன்மை மேலாளர் திரு.ஆஷிஸ் குமார் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வாசாஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2 வது பிரதிவாதி திரு. விஜய குமார் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படாமல் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

5.2) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர், தன்னுடைய வாதுரையில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு திருப்பி செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகையை மற்றும் வட்டி வசூல் செய்ய வேண்டி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதுரைத்தார். தாவா, கடன் தொகையை பிரதிவாதிகள், பெற்றுக் கொண்ட சமயத்தில் கடனுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதி தரப்பு சாட்சியத்தின் மூலம் பிரதிவாதிகள் தாவாவில் கோரியுள்ள கடன் தொகையை திரும்ப செலுத்த கடமை உள்ளது என்பதை நிரூபணம் செய்துள்ளதாக வாதுரைத்தார்.

5.3) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர், பிரதிவாதிகள் தாவா கடன் தொகைக்காக வாதி வங்கி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மோசடியாக

ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று ஏற்படுத்தியுள்ள எதிர் வாதத்தை நிரூபணம் செய்யவில்லை, மேலும் பிரதிவாதி குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கடன் பெற்ற சங்கதிகளையும், கடன் ஆவணங்களில் உள்ள அவருடைய கையொப்பத்தினை ஒப்புக்கொண்டுள்ளதால், பிரதிவாதிகள் தாவா கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று வாதுரைத்தார். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குறை எதிர் வாதங்கள், பிரதிவாதியின் சாட்சியத்தின் படி ஏற்படுத்தியுள்ள எதிர்வாதம், முரண்படுவதாகவும், வாதி வங்கியில் இருந்து கடனாக பெற்ற தொகையைக் கொண்டு வாங்கிய மெசின்களை வேலை இல்லாத காரணத்தால் பயன்படாமல் போனதால் அந்த அடமான பொருட்கள் விற்பனை செய்யமுடியவில்லை என்று பிரதிவாதி சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதால், பிரதிவாதிகள் தாவாவில் கோரியுள்ளவாறு கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று வாதுரைத்து வாதி வழக்குரையில் வாதுரைத்துள்ளபடி தாவா செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மாண்புமிகு டெல்லி உயர் நீதிமன்றம் Kulbhushan Sachdev Vs ICICI Bank Limited and another, Bank of Maharastra Vs Racmann Auto Private Limited வழக்கின் முன் தீர்ப்புக்களை முன்னிலைப்படுத்தி அவருடைய வாதுரைக்கு மேலும் வலு சேர்த்தார்.

5.4) கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் எழுத்துப்பூர்வமான வாதுரைகளை தாக்கல் செய்தும், Industrial Finance Corporation of ……. Vs Thletdc.An & Naonrosr.E Spinining &…., Central Bureau of Investigation Vs V.C.Shukla & Ors, Tomaso Bruno & Anr Vs State of U.P, Murugan @ Settu Vs State of tamilnadu, Vijay Kumar kela Vs Central Bureau of Investigation ஆகிய முன்தீர்ப்புகளை முன்னிலைப்படுத்தியும், வாதி வங்கி பிரதிவாதிகள் கடன் தொகைக்காக ஏற்படுத்திக் கொடுத்ததாக சொல்லும் கடன் விண்ணப்பம் அல்லது ஒப்பந்தம் எதுவும் தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், தாவா சரியான சட்ட வரம்பு காலத்திற்குள் தாக்கல் செய்ய தவரியதாலும், தாவா வழக்கு மூலம் தவறு என்பதாலும், ஒரே சமயத்தில் வெற்று ஆவணங்களில் கடனுக்காக ஆவணங்கள் பெறப்பட்டது என்பதை வாதி வங்கி மேலாளர் ஒப்புக்கொண்டதாலும்,

அவ்வாறு மேசடியாக பெறப்பட்ட ஆவணங்களை தவறாக பயன்படுத்தி தாவா கடன் தொகையை பெறப்பட்டதாக அதிக வட்டி கேட்டும், உண்மை சங்கதிகளை மறைத்து கரை படிந்த கரங்கள் உடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், வழக்கு கடன் தொகைக்காக செலுத்தப்பட்ட தவனைத் தொகைகளை சரியாக கணக்கில் வங்கி அதிகாரிகள் சேர்க்காத காரணத்தாலும், கடன் மூலம் வாங்கப்பட்ட முதல் பிரதிவாதியின் மெசின்களை கைப்பற்றி விற்பனை செய்யாமல், தாவா தாக்கல் செய்துள்ளது சட்டப்படி தவறு என்பதால் தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

5.5) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதம் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எழுத்து பூர்வமான வாதுரை,கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்படுத்திய வாதம், முன்தீர்ப்புகள், கருத்தில் கொள்ளப்பட்டது. ஆவணங்கள், சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

<u>6. எழுவினா எண்.1 க்கான தீர்வு :–</u>

எழுவினா எண் 1: வாதி தாவாவில் கோரியுள்ளவாறு ரூ.16,70,268/– திருப்பி பெற அருகதை உடையவரா ?

6.1) வாதி வங்கியில் இரண்டாம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் நிறுவனத்தின் மெசின்களை வாங்குவதற்காக, நிதி ஏற்பாடாக ரூ.20 லட்சம் வரை கடனாக கேட்டும், பணி மூலதன தேவைகளுக்காக செயல்பாட்டு மூலதனக் கடன் மூலம் ரூ.2 லட்சம் கடன் பெற்றுக் கொண்ட பிறகு, கடன் தவனைத் தொகைகளை திருப்பி செலுத்த தவறியதால் வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்று உத்தரவிட வேண்டி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2) இந்த பொருண்மைகளை நிரூபணம் செய்வதற்காக வாதி வங்கியின் முதன்மை மேலாளர், வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு கடன் பெற்ற சமயத்தில் பிரதிவாதிகள் கடனுக்கு ஆதரவாகி ஏற்படுத்திய ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளார். 07.09.2016 ம் 2ம் பிரதிவாதி, முதல் பிரதிவாதியின்

உரிமையாளராகயிருந்து வாதி வங்கிக்கு ரூ.20,00,000/- ஏற்படுத்திக்கொடுத்த கடன் உறுதிச் சீட்டு, வா.சா.ஆ.1, பிரதிவாதி, முதல் பிரதிவாதியின் உரிமையாளராகியிருந்து வாதி வங்கிக்கு 07.09.2016 ம் தேதி ஏற்படுத்திக்கொடுத்த கடன் அடமான கடிதம், வா.சா.ஆ.2, வாதி வங்கியில் முதல் பிரதிவாதி நிறுவனத்தின் பணி மூலதன செலவுக்காக பெற்ற ரூ.2,00,000/- கடனுக்காக ஏற்படுத்திய கடன் உறுதிச் சீட்டு வா.சா.ஆ.3, அசையும் சொத்தான மெசின்கள் மற்றும் முதல் பிரதிவாதி தயாரிக்கும் பொருட்கள் வாதி வங்கிக்கு அடமானமாக ஏற்படுத்திக் கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ,5 ஆகும். 2ம் பிரதிவாதி, 19.09.2019 ம் தேதி 6 மாதங்களாக வேலையில்லாத காரணத்தால் கடன் தொகை கட்ட இயலவில்லை, மெசின்கள் விற்க ஏற்பாடு செய்கிறேன் என்று வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடிதம் வா.சா.ஆ.6 ஆகும், முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு உரிய 01.01.2019 முதல் 07.09.2020 வரை உள்ள கணக்கு வழக்கு விவரங்களை கணினி நகல் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்ட்டடுள்ளது.

6.3) வா.சா.ஆ.8, கணக்கு விவரங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது கடைசியாக கடன் நிலுவைத் தொகையாக காசோலையின் மூலம் 30.09.2019 ம் தேதி ரூ.66,000 கடைசியாக கடன் நிலுவை தொகையாக செலுத்தப்பட்டுள்ளது, ஆகையால் அன்றைய தேதியிலிருந்து 3 வருட காலத்திற்குள் வாதி வங்கி தாவா கடன் நிலுவைத் தொகையை வசூல் செய்ய வேண்டி தாவாவை தாக்கல் செய்திருக்க வேண்டும். தாவா வழக்குரையை மற்றும் வாதி தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது வாதி வங்கி தாவாவை 23.09.2020 ம் தேதி தாக்கல் செய்துள்ளதால் தாவா நுட்பமான குறைபாடுகள் மற்றும் காலவரை தோசத்தால் பாதிப்படையவில்லை என்று நீதிமன்றம் மேலே விவாதத்தின் அடிப்படையில் முடிவுக்கு வருகிறது.

6.4) வா.சா.ஆ.1 தன்னுடைய சாட்சியத்தில் கடன் நிலுவைத் தொகை ரூ.16,70,268/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய வட்டி 11.55 சதவீதம் என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா வழக்குறையில் தட்டச்சு பிழை காரணமாக 11.7 சதவீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். கடனுக்கான ஆவணங்கள் தான் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 என்றும், கடன் தொகை

விவரங்கள் வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் ஆவணங்கள் சரியாக நிரப்பப்பட்டுள்ளது, கடன் மொத்த தொகை வா.சா.ஆ.4 ல் குறிப்பிட்ப்பட்டும், வா.சா.ஆ.1, 3 ல் கடன் ஒப்பந்த ஆவணங்கள் விவரங்கள் சொல்லவில்லை, கடன் தொகை விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) மேலும் குறுக்கு விசாரணையில் வா.சா.1 ல் கடன் ஒப்பந்த ஆவணம், கடன் விண்ணப்பம் மறைத்து தாவா தாக்கல் செய்யப்பட்டது, என்று சாட்சியம் அளித்திருந்தாலும், அம்மாதிரி ஆவணங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார். வா.சா.ஆ.3 தான் கடன் ஒப்பந்தம், 2019 ம் வருடத்திலிருந்து கடன் தொகை திருப்பி செலுத்தவில்லை. 30.12.2019 ம் தேதி வாராக் கடன் என்று முடிவு செய்யப்பட்டது, அதன் பிறகு வட்டி கோர முடியாது என்பதை மறுத்துள்ளார். வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்கள் பிரதிவாதியிடம் கையேழுத்து வாங்கிய போது தான் வா.சா.ஆ.5, 6 கையொப்பம் பெறப்பட்டது, என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.6) பிரதிவாதி பி.வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் வாதி வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருந்ததால் கடன் கேட்ட போது 2016 ல் கடன் கொடுத்தார்கள், கடன் தொகையைக் கொண்டு சி.என்.சி, மெசின்கள், வாங்கப்பட்டது, என்பதையும், அதற்குரிய ஆவணங்கள் 2 ம் பிரதிவாதியின் பெயரில் பெறப்பட்டது, அதன் அடிப்படையில் தான் கடன் கொடுத்தார்கள் என்பதையும், அந்த கடனுக்காகத்தான் முதல் பிரதிவாதியின் நிறுவனத்திற்காக முத்திரையுடன் மனுக்களில் கையொப்பம் செய்தேன் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், குறுக்கு விசாரணில் 2019 ம் வருடத்திலிருந்து நிருவனத்தை நடத்தமுடியவில்லை, 2016 ம் வருடம் கடன் பெற்ற பிறகு தவணைத் தொகைகள் முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு வரும் காசோலைகள் வைப்பீடு செய்யும் போதே தவணை தொகை 2019 வரை கழித்துக்கொள்ளப்பட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

6.7) 2 ம் பிரதிவாதி, மேலும் குறுக்கு விசாரணையில் வாதி வங்கியில் செலுத்திய தவணைத் தொகை சரியாக வரவு வைக்கப்படவில்லை என்று சொல்லுவது தவறு என்பதை மறுக்கவில்லை, தெரியாது என்று தான் சாட்சியம் அளித்துள்ளார். 2019 ம் வருடம் வங்கி மேலாளர் முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு வந்து கடன் நிலுவைத்

தொகை செலுத்தவில்லை என்று கேட்ட போது தான் வா.சா.ஆ,6 மேலாளர் கேட்டதால் ஏற்படுத்தியதாக ஒப்புக்கொண்டுள்ளார். அதன் பிறகு மெசின்களை வந்து வங்கி அதிகாரிகள் பார்த்தார்கள் யாரும் அதை வாங்க தயாராக இல்லை, மெசின்கள் நிலைபாடு மோசம் அடைந்துவிட்டதால் யாரும் வாங்கவில்லை என்பதையும், கடன் நிலுவைத் தொகை உள்ளது என்று வங்கியில் எழுதிக்கொடுத்தேன், ரூ.12 லட்சம் ரூபாய் செலுத்தியதற்கு ஆவணங்கள் இல்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

6.8) 2ம் பிரதிவாதி, மேலும் குறுக்கு விசாரணையில் கடன் தொகை செலுத்தும் காலம் 7 வருடம், 3ம் வருட காலத்திலிருந்து கடன் தொகை செலுத்தவில்லை, ஆடர்கள் வரவில்லை என்பதை ஒப்புக்கொணடுள்ளார். வா.சா.ஆ.1, 2 ல் உள்ள கையொப்பத்தை மறுத்தும், வா.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் கடன் பெற்ற போது, வங்கி ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்ததை தான் வாதி வங்கி தாவாவில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை ஒப்புக்கொண்டு, அந்த ஆவணங்கள் நிரப்பப்படவில்லை, வெற்று ஆவணங்களில் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் இந்த சங்கதி வாதுரைக்கப்படவில்லை. அவ்வாறு வாதுரைவில்லை என்பதை 2ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டு, மறந்துவிட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.9) ஆகையால், எதிர் வழக்குறை எதிர்வாதத்தின் படி வாதி வங்கி மோசடியாக கடன் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற பொருண்மையை பிரதிவாதிகள் தான் Indian Contract Act, 1872, Section.17 படி நிருபணம் செய்ய வேண்டும், பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி தவிர வேறு சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை, மேலும் கடன் ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்பதையும், கடன் பெற்றபோது வெற்று படிவங்களில் கையொப்பம் செய்ததாக சொல்லும் சங்கதிகளையும் பிரதிவாதிகள் நிரூபணம் செய்ய தவறியுள்ளார்கள் என்று இந்த நீதிமன்றம் மேலே விவாதத்தின் அடிப்படையில் முடிவுக்கு வருகிறது.

6.10) ஆகையால், முன் பத்திகளில் விவாதத்தின் அடிப்படையில் வா.சா.1, பி.வா.சா.1, சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1, 3, 4, 5 ஆவணங்களின் படி வாதி வங்கியில் முதல் பிரதிவாதியின் நிருவனத்திற்காக, 2ம் பிரதிவாதி சி.என்.சி. மெசின்களை வாங்குவதற்காகவும், முதல் பிரதிவாதி நிரூவனத்தின் செயல்பாட்டு மூலதனக் கடனுக்காக ஏற்பட்டுள்ளது என்பது வாதியால் நிரூபணம் செய்யப்பட்டும், வா.சா.ஆ.6 படி கடன் நிலுவை தொகைகள் கட்டவில்லை என்பதை 2ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு கடிதம் ஏற்படுத்திக் கொடுத்த காரணத்தினாலும், வா.சா.ஆ.8. வாதி வங்கி கணக்கு விவரங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு தாவாவில் கோரியுள்ள கடன் தொகையை வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. இந்த எழு வினா வாதி வங்கிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

<u>7) எழுவினா 2 க்கான தீர்வு:-</u>

எழுவினா 2: வாதி தாவாவில் கோரியுள்ளவாறு 11.7% வட்டி பெற அருகதை உடையவரா?

7.1) முன் எழு வினாவில் முதல் பிரதிவாதி நிறுவனத்திற்காக 2ம் பிரதிவாதி, சி.என்.சி மெசின்கள் வாங்குவதற்காகவும், முதல் பிரதிவாதி நிறுவனத்தின் செயல்பாட்டு மூலதனக் கடனுக்கான வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்பது ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் ஏற்பட்டுள்ளதாக விடை காணப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் கடனுக்கான ஆவணங்கள் மோசடியாக ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்யவில்லை என்றும் விடை காணப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கடன் உறுதிச் சீட்டில் ரூ.20 லட்சத்திற்கு, வருடத்திற்கு 11.55 சதவீதமும், வா.சா.ஆ.3 ல் 11.50 சதவீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுத்தான் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கணக்கிட்டு வழக்குறையின் படி 11.7 சதவீதம் வட்டியாக அசலுடன் சேர்த்து கடன் நிலுவைத் தொகை ரூ.16,70,268/– என்று தாவா வழக்குறையில் குறிப்பிடபட்டுள்ளதால், கடன் பெற்ற சமயத்தில் வாதி வங்கியின் வட்டி விகிதாச்சாரங்களுக்கு ஒப்புக்கொண்டு 2ம் பிரதிவாதி ஆவணங்களை

ஏற்படுத்திக்கொடுத்தால், பிரதிவாதிகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ வாதி வங்கிக்கு ரூ.16,70,268/- செலுத்த வேண்டும் என்றும், தாவா தாக்கலான தேதியிலிருந்து வா.சா.ஆ.7 ல் குறிப்பிட்டுள்ள படி தாவா அசல் கடன் நிலுவைத் தொகையான ரூ.12,64,000/- க்கு வருடத்திற்கு 9 சதவீதம் வட்டியும் தாவா தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரை 6 சதவீதம் வட்டி செலுத்தவேண்டும் என்று இந்த எழு வினா மூலம் இவ்வாறு விடை காணப்படுகிறது.

8) எழுவினா 3 க்கான தீர்வு:-

எழுவினா 3 : வேறு என்ன பரிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்?

8.1) வாதி வங்கி தாவா வழக்குறையில் கோரியுள்ளபடி பிரதிவாதிகள் தாவா கடன் நிலுவைத் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று முன் எழுவினாவில் விடை காணப்பட்டுள்ளதால், தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரங்கள் வழங்க வேண்டியதில்லை என்று இந்த எழுவினா இவ்வாறு விடை காணப்படுகிறது.

8.2) **முடிவில், தாவா அனுமதிக்கப்பட்டு 1, 2** பிரதிவாதிகள் **தனித்தனியாகவோ, கூட்டாகவோ வாதி வங்கிக்கு ரூ.16,70,268/- ம் தாவா தாக்கலான தேதியிலிருந்து வா.சா.ஆ.7 ல் குறிப்பிட்டுள்ள படி தாவா கடன் அசல் நிலுவைத் தொகையான ரூ.12,64,000/- க்கு வருடத்திற்கு 9 சதவீதம் வட்டியும் தாவா தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரை 6 சதவீதம் வட்டி மற்றும் செலவுத் தொகை செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

8.3) இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று **2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13 ம் நாள்** என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K R KANNAN

Date 2026.08.13
12.38 PM +5.30
Digitally signed by K R KANNAN
Date: 2026.08.13 12:39:10 +0530

வணிக வழக்குகள் நீதிபதி,
சார்பு நிலை,
செங்கல்பட்டு.

I. வாதி தரப்பு சாட்சி :–

வா.சா.1 – திரு. ஆசிஸ் குமார், முதன்மை மேலாளர்

II. வாதி தரப்பு சான்றாவணங்கள் :–

வா.சா.ஆ.1	07.09.2016	கடனுறுதிச்சீட்டு –அசல்
வா.சா.ஆ.2	07.09.2016	கடன் அடமானக் கடிதம் – அசல்
வா.சா.ஆ.3	28.10.2016	கடனுறுதிச் சீட்டு – அசல்
வா.சா.ஆ.4	28.10.2016	அடமானக் கடிதம் – அசல்
வா.சா.ஆ.5	28.10.2016	பொருப்புறுதிக் கடிதம் – அசல்
வா.சா.ஆ.6	19.09.2019	பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடிதம் – அசல்
வா.சா.ஆ.7	13.12.2019	வாதி வங்கி பிரதிவாதிக்கு அனுப்பிய மறு அழைப்பு அறிவுப்பு – அலுவலக நகல்
வா.சா.ஆ.8	07.09.2020	வங்கிக் கணக்கு பரிமாற்ற விவரங்கள் – கணினி நகல்

III. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–

பி.வா.சா.1 – திரு.விஜயகுமார் த/பெ. கல்யாணசுந்தரம்

IV. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை

K R KANNAN
Date 2026.08.13
12.38 PM +5.30
Digitally signed by K R KANNAN
Date: 2026.08.13 12:39:21 +0530

வணிக வழக்குகள் நீதிபதி,
சார்பு நிலை,
செங்கல்பட்டு.